# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 10 சனிக்கிழமை (24-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 177


# அடுத்தகட்ட நடவடிக்கைக்கு தயாராகின்றது படைத்தரப்பு

## கண்டியில் 70 பேர் கைது

கடந்த செவ்வாயன்று கண்டி நகரில் பொலீஸார் பெருத்த எடுப்பில் நடத்திய தேடுதல்களின் போது பத்துப் பெண்கள் உட்பட எழுபது தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பதினாறு பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் சுமார் 300 பொலீஸார் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (உ-4)

## இரு இடங்களிலிருந்து புளியங்குளம் நோக்கி!

வவுனியா, மே 24

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த பின்னர், தாம் முன்னேறிய நிலைகளில் தற்போது தரித்து நிற்கும் ஸ்ரீலங்காப் படைகள், அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகிவிட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

அடுத்த கட்ட படைநகர்வு ஓமந்தையிலிருந்தும், நெடுங்கேணியிலிருந்தும் ஒரே சமயத்தில் புளியங்குளம் நோக்கியதாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி ஓமந்தை வரை முன்னேறிய படைகளும் — ஜனகபுரவிலிருந்து நெடுங்கேணி வரை முன்னேறிய படைகளும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களக் கிராமங்கள் மீது அகோர ஷெல் தாக்குதல்!

### 2 பேர் பலி; 7 பேர் காயம்

வவுனியா, மே 24

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பிரதேசங்களை அண்டியுள்ள ஆறு சிங்களக் கிராமங்கள் மீது 'வெசாக்' தினமான புதன்கிழமை இரவு நடத்தப்பட்ட ஒன்பது மணி நேர— அகோர – ஷெல் தாக்குத

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி நிலையத்திலிருந்து 121 பொலீஸார் தப்பியோட்டம்!

கொழும்பு, மே 24

நிக்கவரெட்டிய பொலீஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த 360 பொலீஸாரில் 121 பொலீஸார் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பயிற்சி பெற்றவர்களை போர் முனைக்கு கடந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு தபால்!

வவுனியா, மே 24

வவுனியாவின் வடக்கே உள்ள வன்னிப்பகுதிக்கு — மடுப் பாதை வழியாக — நாளை மறுதினம் தபால்கள் எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வவுனியாவுக்கு வடக்கே உள்ள வன்னிப் பிரதேசத்துக்கு தபால்கள் எடுத்துச் செல்லப்பட இருப்பது இதுவே முதல் தடவையாகும். (உ-164)

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பு கறுக்காவேர் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு சின்னத்தம்பி தேவராஜ் (வயது 25) என்ற தமிழ் இளைஞர் இனந்தெரியாதோரால் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

(உ-21)

## நெடுங்கேணியில் போராளி பலி!

கொழும்பு, மே 24

நெடுங்கேணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற புலிகள் உறுப்பினர் ஒருவரை நேற்று படைகள் மறைந்திருந்து கொன்றதாகவும் —

அந்த மோட்டார் சைக்கிளையும், அவர் கொண்டு சென்ற 'ரி 56' ரக ரைபிளையும் படைகள் கைப்பற்றியதாகவும் —

கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்று முன்தினம் நெடுங்கேணியில் நடந்த மோதலில் தமது போராளி ஒருவர் இறந்ததாகப் 'புலிகளின் குரல்' நேற்று அறிவித்தது.

(உ-4-164)

## கற்பிட்டியில் பேரணி; பொலீஸார் கலைப்பு!

புத்தளம், மே 24

கற்பிட்டியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தை எதிர்த்து நேற்று புத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி பொலீஸாரால் கலைக்கப்பட்டது.

இது தொடர்பாக கற்பிட்டிப் பகுதி மக்கள் ஒன்றரை லட்சம் பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட எம்.பி. டாக்டர் மொஹமட் இலியாஸ் தெரிவித்தார்.

அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதற்குப் பொலீஸார் தடைவிதித்துள்ளனர் எனவும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகள் புதனன்றே இங்கு வரும்

யாழ்ப்பாணம், மே 24

யாழ். மாவட்ட மாணவர்களின் ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் எதிர்வரும் புதன்கிழமையே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்று யாழ். கல்வித்திணைக்களத்துக்கு கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை முடிவுகளை நிரல்படுத்தும் பணி இன்னும் பூர்த்தியாகாததே இதற்குக் காரணம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை உடனடியாக வெளியிடுமாறு அமைச்சரவை பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியதை அடுத்து—

கொழும்புக்கான முடிவுகள் அவசர அவசரமாக வெளியிடப்பட்டன. எனினும் வெளியூர்களுக்கான முடிவுகள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

ஒவ்வொரு இடத்துக்குமான முடிவுகளை நிரல் படுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரம் மாவட்டத்துடன் வெலிஓயா இணைப்பு!

கொழும்பு, மே 24

இதுவரை காலமும் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களுடன் இணைந்திருந்த வெலிஓயா (மணலாறு) பிரதேசம் அதிலிருந்து பிரிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டத்துடன்சேர்க்கப்பட்டிருக்கின்றது.

வெலிஓயா பிரதேசசெயலர் பிரிவை அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் பிரிவுடன் இணைப்பது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் உடனடியாக நடைமுறைக்கு வருவதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி அநுராதபுரம் மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ - இராணுவம் இணைந்து புலிகளுக்கு எதிராக

# செங்கலடிச் சந்தையில் துப்பாக்கிச் சண்டை!

# 4 அப்பாவி பொதுமக்கள் பலி!! 13 பேர் காயம்!!!

## பிரதேச சபை உறுப்பினர் சுடப்பட்டதை அடுத்து யுத்த களம்

— உதயன் மட்டக்களப்புச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, மே 24

ரெலோ அமைப்பைச் சேர்ந்த செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பு செங்கலடிச் சந்தையில் நேற்று நண்பகல் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து செங்கலடிச் சந்தைப் பகுதி யுத்தகளமானது.

அங்கு இடம் பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் ஷெல் தாக்குதல்களில் இடையில் சிக்கி ஐந்து வயதுச் சிறுவர் இருவர் உட்பட நான்கு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் 13 பொதுமக்களும் இரண்டு ரெலோ உறுப்பினர்களும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

செங்கலடி சந்தைக் கட்டடத்தின் மேல்மாடியில் ரெலோ அலுவலகம் உள்ளது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ரேலோ இயக்கத்தைச் சேர்ந்த — செங்கலடி பிரதேச சபை உறுப்பினரான — எஸ். துரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MENTAllY RETARDED HOME,
## THE ARK, UDUVIL

மேற்படி நிறுவனம் 01 - 01 - 1997 தொடக்கம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. இங்கு பயில விரும்புவோர் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வயதெல்லை: ஆண்கள் — 5 முதல் 15 வரை.
பெண்கள் — 5 முதல் 13 வரை.

விடுதி வசதி உண்டு.

சகோ. கிறிஸ்ரியானா,
பொறுப்பாளர்.

(47240)



## ஈசன் கல்வி நிலையம்

கோண்டாவில்

**G. C. E. (A/L) 1998**
**ORGANIC CHEMISTRY**

ஆரம்பம்: 27 - 05 - 1997
செவ்வாய் காலை 6. 30 மணி

ஆசிரியர்: Mr. RAMESH B. Sc.

(47241)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் அருளம்மா

(காரைநகர்)

காரைநகர் நடுத்தெருவைச்சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவி அருளம்மா 23-05-1997 இல் காலமாகி விட்டார்.

இவர் பொன்னையா (கணக்காய்வு திணைக்களம், கொழும்பு) சோதிமணி, புஸ்பலீலாவதி, சிவபாலன் (முகாமையாளர் சாந்திவிஹார், கொழும்பு), சிவமணி, ஜெயசோதி (ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்), ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமி, கனகசுந்தரம் (இளைப்பாறிய தபாலதிபர்) காலஞ்சென்ற இராசரத்தினம் (கிறீன்லண்டஸ் வங்கி, கொழும்பு), இராசலிங்கம் (A O மாநகரசபை, திருகோணமலை), நவரத்தினம் (ஆசிரியர், யாழ்ற்றன் கல்லூரி - காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருளையா (பொறியியலாளர் - மலேசியா), இராசரத்தினம், (இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர்), மனோன்மணி. காலஞ்சென்றவர்களான நேசம்மா, நல்லம்மா ஆகியோரின அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 24 05 97 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
ந ஜெயசோதி
(மகள்)

நடுத்தெரு,
காரைநகர்

(47112)

## சரவணமுத்து சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் -
அளவெட்டி ஞானோதயா வித்தியாலயம்)

அளவெட்டி வடக்கு தம்பாகலட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் 20.05.97 செவ்வாய்க்கிழமை அச்செழுவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், கனகசபை, காலஞ்சென்ற கனகேஸ்வரி [ராணி] ஆகியோரது தந்தையும், விக்கினேஸ்வரன், கமலாவின் பாசமிகு மாமனும், யசோதரன், கிரிவரன், துவாரகன், பிருந்தா, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 21.05 97அன்று அச்செழுவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. குணபாலன்
(மருமகன், பேபி)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(47124)

## கனகசபாபதி சத்தியநேசன்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த கனகசபாபதி சத்தியநேசன் (அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) 23 - 05 - 97 அன்று காலமானார்.

இவர் கலாஜினியின் அன்புக் கணவரும், விதுஷாவின் அன்புத் தந்தையும், கனகசபாபதி - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், சிவகுருநாதன் - பாக்கியமலர் ஆகியோரின் மருமகனும், செல்வநேசன், ஆனந்தநேசன், செந்தில்நேசன், பாக்கியநேசன், சித்திரா, சுபத்திரா, ராதா, தீபா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகலா, கலாஞ்சலி, துவாகரன், சஜேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-5-97) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
ம. சிவகுருநாதன்
(சோதிடர்)

'கலாஞ்சலி'
அல்வாய் தெற்கு, அல்வாய்.

(47134)

## பாராட்டு விழா

வலிகாமம் தெற்கு, மே 24

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும், உப அதிபராகவும் முப்பத்தாறு ஆண்டு காலம் சேவையாற்றி இளைப்பாறிய திருமதி மகேந்திரமலர் இராசசேகரத்தைப் பாராட்டி பாடசாலை சமூகத்தினால் பாராட்டு விழாவும், கலைவிழாவும் அண்மையில் நடத்தப்பட்டது.

அதிபர் ச. கைலாசநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

(ஐ-152)

## வல்லை மகளிர் கல்லூரி வெள்ளிவிழா

வடமராட்சி, மே 24

வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியின் வெள்ளி விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளன.

(ஐ-173)

## இலவச ஆங்கில வகுப்பு

கொழும்புத்துறை, மே 24

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஆதரவில் இலவச ஆங்கிலப்பாட வகுப்புகள் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக ஆதீன மேலாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 24

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலயம் 2 கல்விப்பணிப்பாளர் சி. சிவராசாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதனும், கௌரவ விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்கிறார்கள்.

(ஐ-4)


பாண்டியன் தாழ்வு
ஆஞ்சநேயர் ஆலய
ஆண்டு விழாவையொட்டி

நாளை 25 - 05 - 1997 ஞாயிறு காலை 6.30மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகளும், தொடர்ந்து திருவூஞ்சல், உறியடி உற்சவம் என்பனவும் நடைபெற்று

'ஆஞ்சநேயரின் அற்புதங்கள்'

பற்றி
திரு. கா. கணேசதாசனின்
விரிவுரையும்
இடம்பெறும்.

பரமானந்தசுவாமி
பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை.

(47137)



வெற்றிடம்

போட்டோஸ்ரற்

இயந்திரத்தில் வேலை பழகுவதற்கு வெற்றிடம் உண்டு.
இரு பாலாரும் நேரில் வரவும்.

கிளீன்கட்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## செல்வி சதாசிவம் சாந்தினி

மலர்வு: 26 - 08 - 1976
உதிர்வு: 03 - 06 - 1996

திதி: 24 - 05 - 1997

ஓராண்டு சென்றதுவே
ஓயவில்லை நம் கவலை
சீராக நாம் வாழ
பரிவாகப் பாது காத்த
பரிவன்பை இனி எப்போது
மேதினியில் நாம் காண்போம்?
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, சகோதரர்,
சகோதரிகள்,
மைத்துனர்,
மைத்துனி.

33, பாரதி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/775)


நிறுவனங்கள், பாடசாலைகளுக்கான
## கணனிச் சேவைகள்

- ★ கணனிகளை நிறுவுதல், அதற்கான துணைச் சேவைகளை வழங்குதல்.
- ★ கட்டளைத் தொகுப்புக்களை உள்ளீடு செய்தல்.
- ★ நிறுவனச் செயற்பாடுகளை கணனி மயப்படுத்தல்.
- ★ கணனி இயக்குதல் சம்பந்தமான பயிற்சிகளை வழங்குதல்.
- ★ ஆலோசனைச் சேவை வழங்குதல்.

THE DIRECTOR,
INSTITUTE OF INFORMATICS STUDIES,
SOFTWARE UNIT
68, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(47130)



## எமது வெளியீடுகள்!



★ ரோஜாமலரே ★ வி. ஐ. பி.
★ லைவ்ருடே ★ அடிமைச்சங்கிலி
★ பாசமுள்ள பாண்டியரே
★ நேருக்கு நேர்

ஆகிய C. D. பாடல் கசற்றுகள் (பதிவு செய்யப்பட்டு) அழகிய வர்ண கவர்களுடன் விற்பனையாகின்றன. கசற் கவர் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
24/2 பெரியகடை, யாழ். நகர்.

(சி/773)


நல்லூர்
அறிவொளி கல்விக்கழகத்தின்
## இதய அஞ்சலிகள்

எமது கல்விக் கழகத்தின் மாணவி
செல்வி க. திருமகளின்
அன்புத் தாயார்

### திருமதி மாலினி கவீந்திரதாஸ்

அவர்களின் மறைவையொட்டி எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்,
அறிவொளி கல்விக் கழகம்,
150, கோயில்வீதி, நல்லூர்.

(47142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.கவில் பிளவு!

## 7 மாநிலங்கள் அவை உறுப்பினர் திருநாவுக்கரசு பக்கம் தாவினர்

சென்னை: மே 24

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் (அ. தி. மு.க) பிளவு ஏற்பட்டிருக்கிறது.

மாநிலங்கள் அவையில் அங்கம் வகிக்கும் இக் கட்சியைச் சேர்ந்த 14 உறுப்பினர்களில் 7பேர், கட்சியில் இருந்து ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்ட முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு பக்கம் சேர்ந்துள்ளனர்.

ராஜன் செல்லப்பா, எ.ஸ் அகஸ்ரின், என். தங்கராஜ் பாண்டியன், டி. மத்தான், தம்பி வெங்கடாச்சலம், என். ராஜேந்திரன், பி. சுந்தரராஜன் ஆகிய 7 எம். பிக்களுமே கட்சியில் இருந்து விலகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சென்னையில் நேற்று முன்தினம் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அமரர் எம். ஜி. ஆரின் பெருமையை நிலைநாட்ட செல்வி ஜெயலலிதா தவறிவிட்டார் என்று அந்த அறிக்கையில் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அமரர் எம். ஜி. ஆரின் பெருமையை நிலைநாட்டுவதைசெல்வி ஜெயலலிதாஒரு பாவமாகவே கருதுகிறார்.

தன்னை முன்னிலைப்படுத்தி அரசியலை நடத்த வேண்டும் என்றே அவர் செயற்பட்டு வருகிறார்.

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட பெரும் தோல்விக்குப் பின்னரும் செல்வி ஜெயலலிதா திருந்தவில்லை.

அவர் கட்சியை நடத்தி வரும் விதம் பெரும் ஏமாற்றத்தையும் மன விரக்தியையும் ஏற்படுத்தி வருகிறது.

கட்சியின் பொதுக் குழுவைக் கூட்ட வேண்டும் என்று கேட்டு கடந்த மாதம் 24ஆம் திகதி திருநாவுக்கரசுவுடன் இணைந்து நாங்களும் 300 பொதுக் குழு உறுப்பினர்களும் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பியுள்ளோம். — என்று அந்த அறிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மேலும் மூன்று அ.தி.மு. கழக எம். பிக்கள் தம்முடன் சேரக்கூடும் என்று கட்சியில் இருந்து விலகிய எஸ். திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் சென்னையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது இந்த 7 உறுப்பினர்களும் அவருடன் கூட இருந்தனர்.

இதேவேளை— எஸ். திருநாவுக்கரசு தமிழக சட்டப் பேரவையில் எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினராக இருப்பார் என்றும்—

அ. தி. மு. கவில் இருந்து அவரை நீக்கியுள்ளதாக செல்வி ஜெயலலிதா தனக்கு கடிதமூலம் அறிவித்திருப்பதாகவும் சட்டப் பேரவைத் தலைவர் பி. ரி. ஆர். பழனிவேல் ராஜன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் எதிர்க் கட்சியினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் முதல் வரிசையில் திருநாவுக்கரசுக்கு இருக்கை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

## திருநாவுக்கரசுவின் இடத்துக்கு தாமரைக்கனி நியமிக்கப்பட்டார்

கட்சியில் இருந்து திருநாவுக்கரசு நீக்கப்பட்டதை அடுத்து அ. தி. மு. கவின் சட்டப் பேரவைக் கட்சித் தலைவராக திரு, தாமரைக்கனி நியமிக்கப்பட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதா தலைமையில் சென்னையில் நடைபெற்ற சட்டப் பேரவைக் கட்சிக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

உறுப்பினர் பி, ஆர். சுந்தரம் துணைத் தலைவராகவும், எஸ். கறுப்புசாமி கட்சியின் கொறடாவாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## கொங்கோவில் புதிய அமைச்சரவை அமைப்பு

### பிரதமர் பதவி வெற்றிடம்

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் புதிய அமைச்சரவையை அதிபர் கபீலா அமைத்துள்ளார்.

புதிய அமைச்சரவையில் 12 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். தகவல் அமைச்சராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ரபாயின் கன்டா ஏனைய அமைச்சர்களின் பெயர்களை தேசிய வானொலியில் அறிவித்தார். ஆனால் பிரதமர் யார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

முபுட்டுவின் ஆட்சிக்காலத்தில் பணியாற்றிய முன்னாள் பிரதமர் ஹிசிகேடியை புதிய அரசில் பங்குபற்றுமாறு அமெரிக்கா உட்பட சில மேற்கு நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. புதிய பிரதமராக அவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

உலக அரங்கில்

இதேவேளை—

அரச நிர்வாகத்தில் இடம் கேட்டு ஆயிரக்கணக்கானோர் அதிபர் கபீலாவிடம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர்.

இதுவரை பிரதமர் பதவிக்கு மட்டும் நூறு விண்ணப்பங்கள் வந்துவிட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் அதிபர் முபுட்டுவின் விசுவாசிகளாக இருந்த இராணுவ அதிகாரிகள் கூட பிரதமர் பதவிக்கு மனுச் செய்துள்ளனராம்.

(ஐ-5)

## பாதுகாப்பு அமைச்சரை யெல்ட்சின் நீக்கினார்!

மொஸ்கோ, மே 24

ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் ஈகோ றொடியுனோவும், இராணுவத்தின் தலைமை அதிகாரி விக்ரோ சம்ஸனோவும் அதிபர் பொறிஸ் யெல்ட்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்துறையில் மறுசீரமைப்புக்கள் எதனையும் மேற்கொள்ள இவர்கள் இருவரும் தவறிவிட்டனர் என்று அதிபர் ஜெல்ட்சின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரஷ்யாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஏவுகணைப்படைப் பிரிவின் தலைபதி ஈகோ செகிவோவ் தற்காலிகமாக பாதுகாப்புத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அதிபர் ஜெல்ட்சின், பதவி நீக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சரையும், இராணுவத் தலைமை அதிகாரியையும் கடுமையாகச் சாடினார்.

சாதாரண இராணுவ வீரர்களின் உடல் இளைத்துக் கொண்டு வரும் அதேவேளை இவர்களின் உடல்கள் கொழுத்துக் கொண்டு வருவதான நிலையில் உள்ள ஓர் இராணுவத்தை சீர்திருத்தம் செய்ய எப்படி முடியும் என்று ஜெல்ட்சின் கேள்வி எழுப்பினார்.

ஈகோ றொடியுனோவ் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றி வந்தார். (ஐ)

## ஜெனிவாவில் குர்திஷ் மக்கள் ஐ. நா.செயலகத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம்!

ஜெனிவா, மே 24

சுமார் இருநூறு குர்திஷ் இன மக்கள் ஜெனிவாவிலுள்ள ஐ. நா. ஐரோப்பியத் தலைமைச் செயலகக் கட்டடத்தினுள் புகுந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

வட ஈராக்கில் துருக்கிய இராணுவம் குர்திஷ் இன மக்களைப் படுகொலை செய்வதைத் தடுக்க ஐ. நா. தலையிட வேண்டும் எனக்கூறி அவர்கள் அங்கு ஆர்ப்பாட்டம் செய்தனர்,

'ஐ. நாவின் கண்டன அறிக்கைகளால் எமக்குப் பலனில்லை; எங்களுக்கு வேண்டியதுநடவடிக்கைகள்.', 'குவைத்தைக் காப்பதற்கு மட்டுமே சர்வதேசப் படைகளைத் திரட்டிச் சென்றீர்கள் குர்திஷ் இன மக்கள் படுகொலை செய்யப்படும்போது மட்டும் மௌனம் சாதிக்கிறீர்கள்; ஐ. நா. வின் இரட்டை வேடம் வேண்டாம்-' என்று எழுதப்பட்ட அட்டைகளை அவர்கள் ஏந்திச் சென்றனர்.

(ஐ-5)

## ஈரானில் அதிபர் தேர்தல் வாக்களிப்பு

தெஹிரான். மே 24

அதிபர் தேர்தலுக்கான வாக்களிப்பு ஈரானில் நேற்று நடைபெற்றது.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் 3 கோடி 20 இலட்சம் பேர் நேற்றைய தேர்தலில் வாக்களித்தனர்.

33 ஆயிரத்து 365 வாக்குச் சாவடிகளில் 2 இலட்சம் பொலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வாக்களிப்பு நடைபெற்றது.

ஈரானின் புதிய அதிபர் தேர்தலில் நாடாளுமன்ற சபாநாயகர் அலி அக்பர் நாத்திக்நூரி முன்னாள் கலாசார அமைச்சர் முகமது ஹத்தோனி ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்தத் தேர்தலில் வெற்றியீட்டும் வேட்பாளர் அதிபர் ரஸ். பஞ்சானியிடமிருந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்பார்.

தேர்தல் முடிவுகள் திங்களன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

## வாகனங்களின் கீழ் நெரிபடும் தவளை, பாம்பு, தேரைகள்

### தடுக்க ஸ்பெயினில் நடவடிக்கை

மட்றிட், மே 24

தவளைகள், பாம்புகள், தேரைகள் போன்ற சிறு பிராணிகள் வீதியில் செல்லும் வாகனங்களின் கீழ் சிக்கி உயிரிழப்பதைத் தடுக்க ஸ்பெயின் நாட்டு விலங்கினப் பாதுகாப்புச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இத்தகைய சிறு பிராணிகள் வீதிகளைக் கடப்பதைத் தடுப்பதற்காக நெடுஞ்சாலைகளின் இரு புறங்களிலும் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்பெயின் நாட்டு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (ஐ)

★ மத்திய கிழக்கு நிலைவரம்

## பாப்பரசர் தலையீட்டை அரபாத் கோருகிறார்

ஜெருஸலேம். மே 24

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளில் உள்ள தடைகளை அகற்ற திருத்தந்தை பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தலையிட வேண்டும் என பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரபாத்தின் மனைவி திருமதி சௌகா கடந்த புதன் கிழமை திருத்தந்தையைச் சந்தித்தபோது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ஐ-5)

### சென்னைவருவார்

மறைந்த தலைவர் காமராஜரின் பிறந்த தினக் கொண்டாட்டங்களை கௌரவிப்பதற்காக பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் எதிர் வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார். சென்னையில் காமராஜர் சிலையையும் பிரதமர் திறந்து வைப்பார். (ஐ-5)

## இஸ்ரேலியருக்கு காணி விற்கும் பலஸ்தீனியருக்கு மரண தண்டனை

### புதிய சட்டத்துக்கு அமெரிக்கா கண்டனம்

யூதர்களுக்கு எவராவது தமது காணிகளை விற்றால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது என்று பலஸ்தீன அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

பலஸ்தீனியரின் இந்த முடிவை எதிர்த்து மனித உரிமைகளுக்கான ஐ. நா ஆணையகத்துக்கு முறையிடப் போவதாக இஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது.

யூதர்கள் காணிகளைக் கொள்வனவு செய்வதும், மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளில் இஸ்ரேலியக் குடியிருப்புகள் அமைக்கப்படுவதும் இப்பிராந்தியத்தில் சுயராஜ்ஜியத்தை உருவாக்குவது என்ற தமது நம்பிக்கையை சீர்குலைப்பதாகப் பலஸ்தீனியர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை —

இஸ்ரேலியர்களுக்குக் காணிகளை விற்போருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்ற சட்டத்தை யஸீர் அரபாத் ஆதரிப்பது குறித்து அமெரிக்கா தனது மன வருத்தத்தைத் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 20 ஆரம்பப் பாடசாலைகள் நிறுவுவதற்கு 'யுனிசெவ்' உதவும்

யாழ்ப்பாணம், மே 24

யாழ். மாவட்டத்தில் மேலும் 20 ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க 'யுனிசெவ்' அமைப்பு முன்வந்துள்ளது.

ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் 20 ஆரம்பப் பாடசாலைகளை சகலவசதிகளுடன் நவீன முறையில் அமைக்க யுனிசெவ் அமைப்பு உதவி வழங்கியிருந்தது.

தற்போது மேலும் 20 ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க உதவ அந்த அமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது.

மலசல கூடம், குடிதண்ணீர் வசதிகளுடன் நவீன விளையாட்டுச் சாதனங்கள், கல்வி உபகரணங்கள் ஆகியன ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைகளுக்கும் வழங்கப்படவிருக்கின்றன. (ஐ-3)


உ

கற்பகன் துணை

தென்கோவை அருள்மிகு

**ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்**

**நவோத்திர சகஸ்திர (1008) மகா சங்காபிஷேகமும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும்**

25-05-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட தீபாராதனையும் நடைபெற்று எம்பெருமான் வீதி உலா வரும்காட்சியும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

சங்காபிஷேகம் பொது உபயமாக நடைபெறும்.

சங்காபிஷேக பிரதமகுரு:

ஆகம கிரியா ஜோதி, துவஜாரோகணதுரந்தர்
சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக் குருக்கள்

செயலாளர்: அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை

(அரசடிப் பிள்ளையார் தேவஸ்தானம் நாயன்மார்கட்டு)
கோப்பாய் தெற்கு, தேவஸ்தானம்.

பிரசுர அன்பளிப்பு:

**அலங்கார் நகை மாளிகை,**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/772)



## 40 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னை மடி | ஆண்டவன் அடி: |
|---|---|
| 10 | 15 |
| — | — |
| 01 | 04 |
| — | — |
| 1960 | 1997 |

**திருமதி இந்திராதேவி சிறிராஜ்**

(முன்னாள் ஆசிரியை, றோ. க. த. க. பாடசாலை
ஆனைக்கோட்டை)

மதம் சில வகுத்தான் அன்று - மனிதன்
நன்னெறி வாழ்ந்திட
மதம் பல பிரித்தான் இன்று - மனிதன்
தன் நிலை உயர்ந்திட
மனதினுள் மறைத்தனையோ மாமேதை நீ!
மரத்ததோ உன்னுடலும், மதம் கொள் (ல்)
மனிதரால்.

எமது துயரில் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 25-05-97 (ஞாயிறு) எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
தந்தை: இராசேந்திரம்,
மைத்துனர்: சிவலிங்கம்,
அக்கா: சந்திராதேவி,
பெறாமக்கள்: செந்துஜா,
இரோமியா, ஜனனி.

ஆறுகால் மடத்தடி,
ஆனைக்கோட்டை.
(47095)


## "தாயகம்" சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், மே 24

"தாயகம்" கலை இலக்கிய சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாநிதி நா. சுப்பிரமணியம் தலைமையில் திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், செங்கை ஆழியான் ஆகியோர் வெளியீட்டுரை நிகழ்த்துவர். (ஐ-4)

## மரத்தில் இருந்து விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 24

பனை மரத்தில் இருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த சீவல் தொழிலாளியான கந்தையா தர்மலிங்கம் (வயது 45) என்பவரே காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று அவர் மரணமானார். (ஐ-15)

## ஆஸ்பத்திரிக்குள் நாய்களின் தொல்லை

வடமராட்சி, மே 24

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மீண்டும் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வைத்தியசாலை நிர்வாகம் பருத்தித்துறை பிரதேச சபையின் உதவியைக் கோரியுள்ளது. (ஐ-173)

## வேதாகமப் போட்டி

யாழ்ப்பாணம், மே 24

கொழும்பு வேதாகம சங்கத்தினரால் வருடா வருடம் நடத்தப்படும் வேதாகமப் போட்டியில் இவ்வாண்டுக்கான போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

யாழ். வை. எம். சி. ஏ யின் ஆதரவில் நடைபெறும் இப்போட்டியில் 15 குழுக்கள் பங்கு பற்றுகின்றன என்று யாழ். வை. எம். சி. ஏ. தலைவர் டி. ஆர். அருமைநாயகம் தெரிவித்தார். (ஐ-3)


**G·A·Q·**
பேராதனை, யாழ்ப்பாணம்

**பொருளியல்**

விரிவுரைகள்
ஆரம்பமாகியுள்ளன.

By:
R. இராஜேஸ்வரன்
**SHAMROCK**
யாழ்ப்பாணம்.
I.A.S. [illegible]
EASAN [illegible]
(47129)



## கண்ணீர் அஞ்சலி

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளரும். முன்னாள் யாழ்/பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமாகிய,

**திரு. சுந்தரம் டிவகலாலாவின்**
அன்புத் தாயார்
**திருமதி சௌந்தலை சுந்தரம் அவர்கள்**

22 - 05 - 97 இல் இறைபதம் அடைந்து விட்டார். அவரின் பிரிவினால் துயரம் அடைந்துள்ள அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,
அலுவலக ஊழியர்களும்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்.**
29, செட்டித் தெரு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (57132)



## VACANCY IN A DIPLOMATIC MISSION

### POLITICAL ASSISTANT

A Diplomatic Mission is seeking an assistant to work in its political section. The successful applicant will provide information gathering, research, analytical and reporting services on a wide range of political issues, and will be expected to develop and maintain network of contacts within the government, police and military forces, non-governmental organizations, political parties and the media.

The successful applicant must speak and read Tamil as well as Sinhala and English. If you do not have these language skills, please do not apply. Applicants should be University garduates, preferrably with experience as a Journalist, social scientist, historian, teacher or related experience. The job requires an individual with excellent interpersonal skills and the confidence to act independently.

Only successful applicants will be contacted.

Closing date: JUNE 6 1997 - Submit applications to:

**No: 617**
**C/O UTHAYAN,**
**83 2/1, Hampden Lane,**
**COLOMBO-6**

(C/771)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணிற்கு மலர்ந்தது: | விண்ணுக்கு விரைந்தது: |
|---|---|
| 07 | 24 |
| — | — |
| 01 | 05 |
| — | — |
| 1927 | 1996 |

**அமரர் கந்தன் நல்லான்**

உயிர்ப்பும் உயிரும் நானே;
என்னில் விசுவாசம் கொள்பவன்.
இறப்பிலும் வாழ்வான் — அரு : 11:25

பொறுமையுள்ள துணைவனாய் — தூய
அன்புமிக்க நல்ல கணவனாய்
பாசம் நிறைந்த தந்தையாய் — நல்ல
பரிவு காட்டிய தெய்வமே!
எங்கு சென்று விட்டீர் — எங்கள்
பண்புமிக்க தந்தையே!
பூதவுடம்பு மறைந்தாலும் — உங்கள்
புகழ் மட்டும் என்றும் நிலைக்குமே!
நேசமுள்ள உங்கள் முகம் — எங்கள்
நெஞ்சை விட்டு அகலாதையா!

ஆத்மா சாந்திபெற ஆண்டவரைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நீங்கா நினைவில் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
உற்றார், உறவினர்கள்.

சஞ். சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய். (சி/768)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைநடவடிக்கைகள் இடம்பெறும் வேளைகளில்

# கொழும்பு நகரில் எச்சரிக்கைகள் விடுக்கப்படுவது வழமையானதே

## இராணுவ ஆய்வாளர் கூறுகிறார்

கொழும், மே 24

வடக்கில் பெரும் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதெல்லாம் கொழும்பில் எச்சரிக்கைகள் விடுக்கப்படுவது வழமையாகிவிட்ட ஒன்றாகும். பொது மக்களை உஷார்ப்படுத்துவதற்காகவே இவ்வாறான எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் முன்கண்டவாறு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

கொழும்பில் முன்பிருந்ததைவிட பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டே உள்ளது. அடிக்கடி வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது கொழும்பிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் விரிவாக்கப்படுகின்றன.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்பு வந்துள்ளனர் எனவும் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் எனவும் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொழும்பில் இவ்வாறான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் ஏற்படவுள்ள ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவும் சிலவேளைகளில் இவ்வாறான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கலாம்.

பத்திரிகைகளில் இவ்வாறான எச்சரிக்கை செய்திகள் வெளிவந்தபோதிலும் இதுவரை ஒரு குறிப்பிட்ட தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி எதுவும் வெளிவரவில்லையே—என்று அவர் கேள்வி எழுப்பினார்.

(ஐ-10)

## முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு

வடமராட்சி, மே 24

பருத்தித்துறைப் பகுதியில் 2 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் 2 ரூபா 50 சதம் முத்திரையுடன் கூடிய கடித உறைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை தபால் நிலையத்திலும், இப்பகுதியிலுள்ள, பதினொரு தபால் நிலையங்களிலும், தனியார் கடைகளிலும் இவற்றைப் பெற முடியாதிருக்கின்றது.

(ஐ-173)

# நோயாளியிடம் பணம் திருட்டு; பராமரித்தவர் பொலீஸில்!

## யாழ். ஆஸ்பததரியில் சம்பவம்

கொழும்பு, மே 24

சம்பளத்துக்கு நோயாளியைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் நோயாளியின் தலையணையின் கீழ் இருந்த ஆயிரம் ரூபாவைக் கையாடிய சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

நோயாளியை படுக்கையில் இருந்து தூக்கி நிமிர்த்திய சமயம் அவரது தலையணையின் கீழ் கை வைத்து இவர் பணத்தை எடுத்த சமயம் தாதி ஒருவர் இதனை அவதானித்து ஆஸ்பத்திரி பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தகவல் கொடுத்தார் என்றும்—

பாதுகாப்பு அதிகாரிகள் அந்த நபரைப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த நல்லதம்பி கைலாயபிள்ளை என்பவரே பணத்தைப் பறி கொடுத்த நோயாளி ஆவார்.

நோயாளியிடம் பணம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

# தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு உடனடியாக 100 கட்டில்கள்

யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி பாடசாலைக்கு 'உடனடியாக 100 கட்டில்களை அனுப்புமாறு சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்தத் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தங்கியிருந்து பயிற்சி நெறியைக் கற்கும் தாதிய மாணவர்கள் படுக்கை வசதியின்றி கஷ்டப்படுவதாக கடந்த 19 ஆம் திகதி உதயனில் வெளியான தகவலை கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்தே அமைச்சர் மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

(இ-3)

## குழாய் நீர் விநியோகம்

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் உள்ளக நோயாளர் சிகிச்சைக்கான "வார்ட்" பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ-111)

அனலைதீவுக்கு

# ஜெனரேட்டர் வந்தும் மின் கிடைக்கவில்லை

அனலைதீவுக்கு மின்சாரம் வழங்கும் பொருட்டு ஜெனரேட்டர் இயந்திரம் ஒன்று அங்கு வந்து சேர்ந்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும் மின் விநியோகம் இன்னும் வழங்கப்படவில்லை.

மின் இணைப்பு வேலைகள் தாமதமாகி உள்ளதாலேயே மின் விநியோகம் தாமதமடைவதாகக் கூறப்படுகிறது. இதனால் மக்கள் பெரிதும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

(ஐ.111)

# ஊர்காவற்றுறையில் சந்தை கட்டும் பணி

நெடுந்தீவு, மே 24

ஊர்காவற்றுறை நவீன சந்தையின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

6 லட்சத்து 7 ஆயிரத்து 700 ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதியில் 4 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவை யூ. என். எச். சி. ஆர். வழங்கியுள்ளது. மிகுதித் தொகையை ஊர்காவற்றுறை பிரதேச சபை செலவு செய்யவுள்ளது.

(ஐ-111)

நயினை நாகபூஷணி உற்சவம்:

# வடமராட்சியில் இருந்தும் விசேட பஸ் சேவை நடக்கும்

வடமராட்சி, மே 24

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ விசேட பஸ் சேவையை நடத்தவுள்ளது.

வடமராட்சி, வலிகாமம் கிழக்குப் பிரதேச பக்தர்களின் வசதி கருதி உற்சவ காலத்தில் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், யாழ்ப்பாணம் ஊடாக குறிகாட்டுவான் வரை இவ்விசேட சேவை நடைபெறும்.

குறிகாட்டுவானிலிருந்து படகு மூலம் பஸ் பயணிகள் நயினாதீவுக்கு செல்ல ஏற்பாடாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-173)

# கடமையைச் சரிவரச் செய்தால் உரிய பலன் தேடி வந்தடையும்

## பிரிவுபசார விழாவில் உரை

கடமை உணர்வுடன் பிரதிபலன் எதிர்பாராமல் சேவை செய்யும் எவருக்கும் அதன் பயன் தானாகவே தேடி வரும். தன் கடமையை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்படும் அரச ஊழியர்கள் பதவியுயர்வு தேடி அலைய வேண்டியதில்லை. அவை தானாகவே அவர்களைத்தேடிவரும்.

பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாகன் இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்ற டாக்டர் க.தா. சிவபாதத்தின் சேவையைப்பாராட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரினால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அலுவலக மண்டபத்தில் சாவகச்சேரி நகர் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் து. கிளின்டஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மிருசுவில் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் க. தம்பித்துரை, மேற்பார்வை குடும்பநல சேவையாளர் செல்வி வே. பாலாம்பிகை, குடும்பநல சேவையாளர் திருமதி வ. சிவபாக்கியம், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைப் பதில் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. ஆர். டேவிட் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

(ஐ-117)

# பருத்தித்துறை, புலோலி பகுதிகளுக்கு மின்சார விநியோகம் ஆரம்பம்

வடமராட்சி, மே 24

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 250 கே.வி. ஜெனரேட்டர் மூலம் பருத்தித்துறை நகரசபைப் பகுதியிலும், புலோலி கிராமப்பகுதியில் சில இடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம் மின்விநியோக ஆரம்ப வைபவம் கடந்த புதன்கிழமை பிற்பகல். வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போவில் பருத்தித்துறை மின் அத்தியட்சகர் எஸ். ராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அருகில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து இலங்கை மின்சாரசபையின் வட பிராந்திய பொது முகாமையாளர் எஸ். இராஜேந்திரா ஜெனரேட்டரை இயக்கி வைக்க வடமராட்சி சிவில் இணைப்பதிகாரி கேணல் என். ஜ. ஆர். விஜயரத்தினா ஜெனரேட்டரில் உள்ள பொத்தானை அமுக்கி மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்ட மின்சார சபை மின் பொறியியலாளர் எஸ். வல்லிபுரம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இந்த ஜெனரேட்டர் மூலம் மாலை 6 மணி தொடக்கம் 11 மணி வரையும், அதிகாலை 4 மணி தொடக்கம் 6மணி வரையும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

சுமார் இரண்டாயிரம் வீடுகளுக்கு இந்த ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்படும்.

(ஐ-173)

## நகரசபை செயலாளர்கள் நியமனம்

வடமராட்சி, மே 24

பருத்தித்துறை நகரசபைக்கும், வல்வெட்டித்துறை நகரசபைக்கும் புதிய செயலாளர்கள், பிரதம எழுதுவினைஞர்கள் இம்மாத நடுப்பகுதி முதல் வட—கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பருத்தித்துறை நகரசபையின் செயலாளராக என். சோமசுந்தரமும், வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளராக வெ. கனகசபாபதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு சபைகளுக்கும் இரண்டு பிரதம எழுதுவினைஞர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-173)

# மொறவெவவில் பொலீஸ் நிலையம்

கொழும்பு, மே 24

கடந்த 12 ஆம் திகதி தாக்குதலுக்குள்ளான மொறவெவ பொலீஸ் நிலையப் பகுதியில் தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் வாழ்ந்த விவசாயிகள் வெளியேறிவருவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே தற்சமயம் தற்காலிக பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

(இ-150-3)

# மணலாறு இராணுவ முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல்!

கொழும்பு, மே 24

வெலிஓயாவில் (மணலாறு) உள்ள இராணுவ முகாம் ஒன்று கடந்த புதன் இரவு புலிகளின் ஷெல் வீச்சுக்கு உள்ளானது. இத்தாக்குதலில் 3 இராணுவத்தினர் காயம் அடைந்தனர் என்றும்— 12 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-3)

யாழ். ஆஸ்பத்திரியிலும்

# ஜேர்மன் நிறுவன உதவியுடன் குடி தண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாநகரசபையின் உதவியுடன் கரையோரப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற் கொண்டு வரும் ஜேர்மன் நாட்டு ஜி.ரி.சற் நிறுவனத்தினர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கும் குடி தண்ணீர்வழங்கிவருன்றனர்.

யாழ்.போதன வைத்தியசாலை வளாகத்துக்குள் தண்ணீர்த் தாங்கி ஒன்றினை அமைத்து திருநெல்வேலியில் இருந்து பெறப்படும் குடி தண்ணீர் அதன் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

(ஐ-15)

## உணவுப் பார்சல்கள்

வடமராட்சி, மே 24

வெசாக் தினத்தை முன்னிட்டு வடமராட்சியிலுள்ள படையினரால் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் கடந்த புதன்கிழமை மதிய உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திருமதி மீனலோசனி குமாரலிங்கம் ஆவரங்கால், புத்தூர் என விலாசம் கொண்டவரது தேசிய அடையாள அட்டை இல. 478512538V தவறிவிடப்பட்டு விட்டது. கண்டெடுத்தவர்கள். சி குமாரலிங்கம், இலங்கைவங்கி (யாழ். கிளை) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[47103]

காங்கேசன்துறை இறங்குதுறையில் 22-05-97 அன்று மண்ணிற (நம்பர்) சூக்கேஸ் தவறிவிட்டது. அதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளன. மேற்புறத்தில் எமது முகவரியும் எழுதப்பட்டு இருக்கிறது கண்டெடுத்தவர்கள் யாழ். கச்சேரி நலன்புரிச் சங்கத்திலோ, அல்லது இராசேந்திரம் சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி, என்ற முகவரியிலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[47116]

சுந்தரலிங்கம் கிஷோகுமார் என்பவரது விஷேட அடையாள அட்டை மானிப்பாய்க்கும் தொட்டிலடிக்கும் இடையில் தவறவிடப்பட்டு விட்டது. கண்டு எடுத்தவர்கள் இளவாலை வடக்கு, இளவாலை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அல்லது அறியத்தரவும்.

[47113]

எனது மூக்குக் கண்ணாடி (கூட்டுடன) சாவகச்சேரிக்கும் மாம்பழம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் கடமை புரியும் சி. சிவஞானம் என்பவரிடம் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[47126]

### புத்தகப்பிரியர்களே!

புதிய தமிழ் வெளியீடுகள் ஏராளம்; வாருங்கள்; பாருங்கள்! எடுத்து வாசியுங்கள், அறிவைப்பெருக்குங்கள் லிங் லெண்டிங் லைபிரறி Ling Lending Library, (41, தபாலக வீதி, சாவகச்சேரி).

[47099]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும் தொடர்பு; Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely.

[ 47111]

### மணப்பெண் தேவை

யாழ். இந்து. கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய B. Sc பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றும் மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர் ஜாதகக் குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு: இல. 619, மே/பா, 'உதயன்' யாழ்ப்பாணம்.

(47115)

யாழ்ப்பாணத்தில் சொந்த தொழில் புரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மகனுக்கு, செவ்வாய்க் குற்றமுள்ள கிரகபாவம் குறைந்த, அழகும், நற்பண்பும் நிறைந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். இல. 618, மே/பா, 'உதயன்' யாழ்ப்பாணம்.

(47114)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## செல்லத்துரை சிவசுப்பிரமணியம்

தோற்றம்: 1927

சிவபதமடைந்தது: 24–04–1997

சண்டிலிப்பாய் மாகியம்பதி அங்கணாக்கடவை மீனாட்சி அம்பிகை ஆலய தர்மபரிபாலனசபை முன்னாள் தலைவரும், ஆலங்குளாய் முருக மூர்த்தி ஆலய தர்மபரிபாலன சபையின் பொருளாளரும், சண்டிலிப்பாயிலுள்ளமற்றும் பல்வேறு ஆலயங்களில் பங்கு பற்றி திறம்பட செயற்பட்டவரும், சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சனசமூக நிலையத்தில் சேவையாற்றியவரும், சண்டிலிப்பாய் மக்களின் சுகதுக்கங்களில் பங்கு பற்றியவரும் மற்றும் பல்வேறு பொது தாபனங்களில் செயலாற்றியவரும், அரசசேவையில்—தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்றவருமான சிவனடியார் செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் சிவபதமடைந்த 31 ஆம் திதியை சண்டிலிப்பாய் வாழ் மக்கள் மிகுந்த கவலையுடன் அனுட்டிக்கின்றனர்.

அன்னாருக்கு நாம் செய்யும் புனிதமான கைம்மாறு, அவர் செய்த சைவப் பொதுப்பணியைத் தொடர்ந்து செய்வதேயாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மாகியம்பதி அங்கணாக்கடவை அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் சேவைகளை நன்றியுடன் நினைவு கூரும்:

அங்கணாக்கடவை மீனாட்சி அம்பிகை
தர்மகர்த்தா சபையினரும்,
சண்டிலிப்பாய் வாழ் மக்களும்.

(47230)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

## சிவபாதசுந்தரம் ஜெயந்தினி

திதி: 24-5-1997

அன்னையின் மடியில்: 19-7-1983

ஆண்டவன் அடியில்: 16-5-1995

ஈராண்டு சென்றது அம்மா!
ஈரவிழி காயவில்லை உனது
அன்பு முகம் பாராமல்.
ஆசை மொழி கேளாமல்
ஆறிடுமோ எங்கள் மனம்
ஏங்கி ஏங்கித் தவிக்கின்றோம்
தூங்கி எழுகின்றபோதும்;
துயரோடு விழிக்கின்ற எமது
துன்பத்தை யாரறிவார்?
உள்ளே அழுது வெளியே சிரித்து
ஊமையாய் வாழுகின்ற
உண்மையையும் யாரறிவார்?
தந்தையும் அன்னையும் கலங்கிடவே
தம்பியவன் தவித்திடவே
பாசத்தை மறந்து பாதியில் சென்றதேன்?
எமது இதயத்தின் அழியாத ஓவியமே!
எங்களைப் பரிதவிக்கவிட்டு
காற்றாய்ப் பறந்து விட்டாய்.

அன்பு;
அப்பா, அம்மா, தம்பி,
அம்மம்மா, அக்காமார், அண்ணாமார், மச்சான்மார்,
மச்சாள்மார்.

நிரந்தர முகவரி;
ஐ சிவபாதசுந்தரம் (பச்சாய்)
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்,

(47237)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 – 04 – 1915



மறைவு: 24 – 05 – 1994

திருமதி

## சிசிலியா அந்தோனிப்பிள்ளை

(பாண்டியந்தாழ்வு)

ஆண்டு மூன்று கடந்ததே
ஆண்டு நூறு சென்றாலும்
மாண்டிடுமோ நின் நினைவு?

குடும்பத்தினர்

128, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு.

(46294)

யா/ பருத்தித்துறை,
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பாடசாலையின் அதிபர் பதவிக்கு அதிபர் தரத்தையுடைய அல்லது ஆசிரிய சேவையில் 2-I இல் உள்ள பெண் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களின் சுயவிவரங்களை கொண்ட விண்ணப்பங்களை தங்கள் பகுதிக் கோட்டக் கல்வி அதிகாரியினால் உறுதிப்படுத்தி 30-05-1997 ஆம் திகதிக்குப் பிந்தாமல் யாழ். வலயம் - 02 கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறை.

(47121)

# 15 - வது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிற்கு: 01 – 06 – 1927



விண்ணிற்கு: 08 – 06 – 1982

அமரர்

## சின்னத்தம்பி சிவஞானரத்தினம்

(சின்னராசா, S. S. R.)

திதி: 24 - 05 - 97 சனிக்கிழமை (துதியை)

15 ஆண்டுகளாக உங்களைக்
காணாமல் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

'கந்தன் கருணை'
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

(47097)

# 30 ஆம் நாள் நினைவு அஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

தோற்றம்: 03 – 02 – 1925

மறைவு: 25 – 04 – 1997

இவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை 25—05 97 ஞாயிற்றுக்கிழமை மல்லாகத்தில் உள்ள எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிக அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கணேஷ்வரன் (ரவி)
(மகன்)

7 ஆம் கட்டை,
கோயில் வீதி,
மல்லாகம்.

(47117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒவ்வாத அணுகு முறை

அரசாங்கப் படையினர் இப்போது மேற்கொண்டு வரும் ''ஜெயசிகுறு'' இராணுவ நடவடிக்கை முக்கியமான தரைப்பாதை ஒன்றைத் திறப்பதற்கு வழி வகுக்கக்கூடும். ஆனால் நிச்சயமாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சமாதானவழியைத் திறக்கவேமாட்டாது.

இவ்வாறு அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கருத்து வெளியிட்டிருப்பதாக, ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கல்விமான் கருணாசேன கொடித்துவக்கு உட்பட அரசியல் வாதிகள் தொடக்கம் சமாதான விரும்பிகள் வரை இப்போதைய படை நடவடிக்கை ஆக்கபூர்வமற்ற பயனையே தரும் என்று விமர்சித்துள்ளார்கள்,

அரசாங்கம் வன்னிப் போரைத் தொடங்கியதன் நோக்கம் சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியைப் பின் தள்ளிப்போடுதற்கேஎன்பதனை அரசியல் ஆய்வாளர்கள் தான் சொல்ல வேண்டும் என்பதல்ல. அரசியல் பின்னணி நன்றாகத்தெரிந்த சாமான்யன் ஒருவனும் சொல்லக் கூடியது தான்.

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியிலேயே தீர்வு காணவேண்டும் என்பதில் அரசாங்கம் உண்மையான கரிசனை உடையதாக இருப்பின், அதன் அவசரத்தைக் கருதியிருப்பின் இந்த நேரத்தில் வன்னிப் பெரும் தாக்குதலைத் தொடங்கியிருக்கவே மாட்டாது.

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரே அணியாகச் செயற்படுவது என்ற திருப்பமான இணக்கப்பாடு காணப்பட்ட ஒன்றரை மாதத்தில், வன்னிப் போர் தொடங்கப்பட்டது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது; பல தரப்புகளில் ஆச்சரியத்தையும் கொடுத்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் அரசுக்குக் கிடைத்த வெற்றி அரசியல் தீர்வு காண்பதற்கான ஆதரவு என்று கருதப்பட்டது. ஆனால் அரசு தென்னிலங்கை மக்களின் விருப்பத்துக்கு முரணாகச் செயற்பட முனைந்துள்ளது.

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழிமுறைகளில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது என்ற நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, இராணுவத் தீர்வைக் கொண்டு வருவது என்ற முடிவுக்கு அரசு வந்து விட்டதோ என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

இப்போதைய இராணுவ நடவடிக்கையின் மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தி அவர்களை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரங்கில் இருந்து ஒதுக்கி விட அரசு நினைத்திருக்கலாம். ஆனால் அது சமாதானத்துக்கான கதவுகளை மேலும் பலமாக, இறுக்கமாக அடைத்துவிடும் என்பதனை அது உணரத் தவறுவது ஏனோ?.

யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், ஒவ்வாத அணுகு முறையைக் கைக்கொள்வதன் மூலம், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று சாதித்து நிற்க முனைவதால், தீர்வும் சமாதானமும் அமைதியும் ஒருபோதும் வரப்போவதில்லை என்பதனை அரசு புரிந்து கொண்டு வன்னிப் போரை நிறுத்த வேண்டும்.

# புதிய கல்வி வலய அமைப்பு

# ஜூலை முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், மே 24

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் புதிய கல்வி நிர்வாக முறை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வரும்.

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

புதிய திட்டத்தின்படி கல்வி நிர்வாகத்துக்காக வடக்கில் பத்து கல்வி வலயங்களும் கிழக்கில் பத்து கல்வி வலயங்களுமாக மொத்தம் இருபது வலயங்கள் உருவாக்கப்படும்.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் நான்கும், முல்லைத்தீவில் இரண்டும், கிளிநொச்சியில் ஒன்றும், மன்னாரில் ஒன்றும் வவுனியாவில் இரண்டும் என வலயங்கள் அமைக்கப்படும்.

இந்த ஒவ்வொரு வலயங்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்களும் நியமிக்கப்படுவர்.

இது தவிர, பல்வேறு வலயங்களை ஒன்றுசேர்த்து அவை ஒவ்வொன்றுக்கும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இவ்வாறு வடக்கு, கிழக்கில் மொத்தம் ஏழு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள். இவ்வாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களாக பின்வருவோர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

★ கிளிநொச்சி— முல்லைத்தீவு:- திரு. கே. சுப்பிரமணியம்.

★ மன்னார் — வவுனியா: திரு. சி. புலந்திரன்.

★ மட்டக்களப்பு;- திரு: மனோகரன்.

★ திருகோணமலை:- திரு. ஆரியசிங்க.

★ கல்முனை:- ஜனாப் இஸடீன்.

★ அம்பாறை:- ஒரு சிங்களவர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

★ யாழ்ப்பாணம்:- யாழ்ப்பாணத்துக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை. அனேகமாக திரு. இ. சிவானந்தன் நியமிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கில் உள்ள பத்து வலயங்களுக்கும் கல்விப் பணிப்பாளராகவும் மேலதிக கல்விப் பணிப்பாளராகவும் முறையே பின் வருவோர் நியமிக்கப்படக் கூடும் என மாகாணசபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

★ யாழ்ப்பாணம் வலயம் 1 (நல்லூர், யாழ்ப்பாணம், தீவகக் கோட்டங்கள்):- திரு வ. தாணையா, திரு. வி. இராசையா.

★ யாழ்ப்பாணம் வலயம்2 (சங்கானை, உடுவில், தெல்லிப்பளைக் கோட்டங்கள்):- திரு. சு. இரத்தினராஜா, திரு. எஸ். கணபதிப்பிள்ளை

★ யாழ்ப்பாணம் வலயம்3 (வடமராட்சி);- திரு. சி. சிவராஜா, திரு.வி.ரி. செல்வரட்ணம்

★ யாழ்ப்பாணம் வலயம்4 (தென்மராட்சி):- திரு. நா. சுந்தரலிங்கம் (மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் இன்னும் தெரிவாகவில்லை):

★ கிளிநொச்சி:- திரு. பொன் சபாபதி.

★ முல்லைத்தீவு வலயம் 1:- திரு. விசாகலிங்கம்.

★ முல்லைத்தீவு வலயம் 2:- (மாங்குளம்) திருமதி வேதநாயகம்.

★ வவுனியா வலயம்1:- திரு. குணராஜரட்ணம், திருமதி ஒஸ்வேல்ட்.

★ வவுனியா வலயம்2 :- திரு கனகரட்ணம், திரு. ஏ. பொன்னையா.

★ மன்னார்:- ஜனாப் ஏ. ஸி. எம். ஹக்.

(உ)

## கப்பல் சேவை இன்று இல்லை

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறாது என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு அறிவித்தது.

## கைது

கண்டியில் தமிழ் கான்ஸ்டபிள் ஒருவரின் அடையாள அட்டையை வைத்திருந்த மற்றொரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

பொலீஸ் கான்ஸ்டபிள் தியாகராசா என்பவரின் பொலீஸ் அடையாள அட்டையையே இவர் வைத்திருந்தார் என பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-150)

# பிரமுகர்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொலீஸாரும் போர்முனைக்கு!

## ஆட்சேபிக்கின்றனர் அரசியல்வாதிகள்

கொழும்பு, மே 24

அரசியல்வாதிகளின் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலீஸாரை போர் முனைக்கு அனுப்பவேண்டாம் என்று பல அரசியல் வாதிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்கள் மற்றும் மாகாணசபை — பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்ட பொலீஸாரை போர் முனைக்கு அனுப்ப அரசாங்கம் எடுத்துள்ள முடிவையே பல அரசியல்வாதிகள் கண்டித்துள்ளனர்.

இந்த விடயத்தில் தலையிடவேண்டாம் என்று அரசியல்வாதிகளை பொலீஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது.

அதே நேரம் —

போர்முனைக்குச் செல்ல மறுக்கும் பொலீஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலீஸ் தலைமையகம் எச்சரித்துள்ளது. (உ-150-3)

# யுனிசெவ் உதவியுடன் 300 மல கூடங்கள்

## விரைவில் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 24

யாழ். மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் சுகாதாரத்தைப் பேணும் வகையில் 300 மலசல கூடங்களை அமைக்க ''யுனிசெவ்'' அமைப்பு முன்வந்துள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் போதிய மலசல கூட வசதிகள் இல்லாத காரணத்தால்: சுகாதார நிலை சீர்கெட்டு நோய்கள் பரவும் அபாயநிலை உள்ளது.

இதையடுத்து இந்த அமைப்பு மலசல கூடங்களை அமைக்க முன்வந்துள்ளது.

மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ள இடங்கள் வருமாறு;-

★ உடுவில் பிரதேச செயலர் பிரிவின்துரையன்தோட்டம், தோரணங் கடவை ஆகிய இடங்களில் 75 மலசல கூடங்கள் அமையும்.

★ வட்டுக்கோட்டையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# "சப்புமல்புர" பெயர்ப் பலகை நீக்கப்படும் என்கிறார் அனுருத்த

கொழும்பு, மே 24

''வவுனியா-மன்னார் வீதியில் புதிதாகத் திறக்கப்பட்ட பறையனாலங் குளம் பொலீஸ் நிலையத்துக்கு 'சப்புமல்புர' என்ற பெயர் சூட்டப்பட்ட விடயம் பற்றி எனக்குத் தெரியாது. அந்தப் பெயர்ப் பலகை நீக்கப்படும். இதற்கான உத்தரவு உடனடியாக பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்''.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயத்தை எனது கவனத்துக்கு எவரும் இதுவரை கொண்டு வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பறையனாலங் குளம் பொலீஸ் நிலையத்துக்கு ''சப்புமல்புர'' எனப் பெயர் மாற்றப்பட்ட விடயம் குறித்து புளொட், ஈ.பி.டி.பி அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு கடிதங்களை அனுப்பியிருந்தன. (ஐ-3)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

# விசேட பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிட உறுதி

யாழ்ப்பாணம், மே 24

1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் விசேட பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுப்பதாக பரீட்சை ஆணையாளர் உறுதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். நல்லூர் கோட்டப் பணிப்பாளர் வ. தாணையா இந்தப் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளிவராத காரணத்தால் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தேசிய பாடசாலை அனுமதியைப் பெற்று கல்வியைப் பெற முடியாத நிலையில் உள்ளதாகவும் —

புலமைப்பரிசில் உதவித்தொகையை அவர்கள் இழக்க நேரிடுவதாகவும் பரீட்சை ஆணையாளரிடம் தெரிவித்தார்.

தற்சமயம் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் —

அது முடிந்ததும் இந்த முடிவை வெளியிட ஏற்பாடு செய்வதாகவும்—அவர் தெரிவித்தார்.

5ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இந்தப் பரீட்சை வடபகுதி மாணவர்களுக்கு மட்டும் விசேட பரீட்சையாக 1996 இல் நடத்தப்பட்டது தெரிந்ததே.

(ஐ-3)

## நாளை

**வைகாசி 11**

ஞாயிற்றுக்கிழமை

திதி: திருதியை நண்பகல் 12.03 வரை.

நட்சத்திரம்: மூலம் காலை 6.55 வரை.

சுபநேரம்: 8. 52 - 10.22

ராகுகாலம்: 4.22-5 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 24

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 19 ஆம் திகதியும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

மல்லாகம்பெரியதம்பிரான் கோயில் பெரும் பொங்கல் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(ஐ-4)

★ ★ ★

கரவெட்டி இந்திரன் முருகன் கோயிலில் புதிதாக விநாயகர் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

இக் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, புனரமைப்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-173)

★ ★ ★

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ அன்னப் பாவாடை திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

(ஐ-30)

இளவாலை பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நாளை காலை 7. 30 மணிக்கு நடைபெறும் பாடல் திருப்பலியுடன் முடிவடையும்.

★ ★ ★

உடுவில் கற்பொக்கணை விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் மாலை நான்கு மணிக்கு திருமுறை ஓதல், சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். அதனை தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெற உள்ளன. (ஐ-152)

★ ★ ★

திருஞானசம்பந்தர் குருபூசையை ஒட்டி நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலில் இன்று காலை 8.30 மணிக்கு ஆலய பூசையைத் தொடர்ந்து திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். தொடர்ந்து திருமுறைப்பாராயணமும் நடைபெறும்.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ஐ)

★ ★ ★

திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் கோயிலில் ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் முற்றோதல் நடைபெறும். (ஐ)

## 121 பொலீஸார்...

(முதலாம் பக்கத் தொடர்

16ஆம் திகதியன்று அனுப்புவதற்கு ஏற்பாடுகள் நடந்ததாகவும்—

அதனை முன்கூட்டியே கேள்விப்பட்டே இவர்கள் அதற்கு முதல் நாள் தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இவர்களைத் தவிர்ந்த ஏனையோரை வீட்டுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டிருந்தது.

தற்போது சகலரும் மீண்டும் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆனால் சிறு எண்ணிக்கையினரே பணிக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிகின்றது.

மேற்படி பொலீஸாருக்கு நிக்கவரெட்டிய பொலீஸ் பயிற்சி நிலையத்தில் ரி. 56, எல். எம். ஜி. துப்பாக்கிகளைக் கையாள்வது தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்ததாம். (உ-150-3)


தென் இந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்
தொழிற் பயிற்சி நிலையம்
உயர் தையல் கலை வகுப்புகள்

மேற்படி விஞ்ஞானமுறை (Scientific) தையல் வகுப்பு 02 - 06 - 97 இல் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை 30 - 05 - 97 இற்கு முன்னதாக ''பணிப்பாளர், தொழிற் பயிற்சி நிலையம், கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தகைமை:
முன்பு எமது தொழில் பயிற்சி நிலையங்களில் 6 மாதகால பயிற்சி முடித்தவர்களாக இருக்க வேண்டும்.
பயிற்சிக்காலத்தில் மாதம் ரூபா 50/- பயிற்சிக் சட்டணமாக அறவிடப்படும். பயிற்சி முடிந்ததும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- பணிப்பாளர்

தென் இந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை. (சி/776)

புலமைப் பரிசில் '97
18-5-97 எம்மால் எமது நிறுவனத்தில் நடத்தப்பட்ட 24 ஆவது பரீட்சையில்
செல்வன் மகேந்திரராஜா டினேஷ்
முதன்மைப் புள்ளி - 186 புள்ளிகள் பெற்றமைக்காக பாராட்டுகின்றோம்.
25 - 5 - 97 ஞாயிறு வழமைபோல் 25 ஆவது பரீட்சை நடைபெறும்.
BOND INSTITUTES, யாழ்ப்பாணம்.
(47140)

இமையாணன்
சிறீ முருகன் ஆலயம்
மேற்படி ஆலய வளர்ச்சி நிதிக்காக 23—05—97 அன்று நடைபெற விருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 23 — 07 — 97 இல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.
செயலாளர்:
சிறீ முருகன் ஆலய பரிபாலன சபை.
(47123)

JEYASUNJAN
CONSTRUCTION
ஜெயசுஞ்சன்
கொன்ஸ்ரக்சன்
(கட்டட ஒப்பந்தகாரர்)

வாடிக்கையாளர்களே!
நவீன தொழில் நுட்பத்துடன் குறுகிய காலத்தில் உங்கள் சட்டட வேலைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
1) 20 அடி அகலமும் தேவையான நீளமும் கொண்ட பாடசாலை மற்றும் களஞ்சியக் கட்டடங்கள் கூரை மரங்களோ இரும்புச் சலாகைகளோ இன்றி பாதுகாப்பாக சுழல் காற்றிலும் பாதிக்காத முறையில் சிறப்பாக அமைத்துக் கொடுக்கப்படும்.
2) 30 அடி உயரமான தேர்க்கொட்டகைகள் இரும்புச் சாரங்களின் உதவியுடன் 45 தினங்களில் நிர்மாணித்துத் தரப்படும்.
3) சகல விதமான கட்டடங்களின் திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
"நந்தவனம்"
ஊரெழு கிழக்கு, ஊரெழு.
(47089)


கைதானோர், காணாமற் போனோர் விவகாரம்

# ஜனாதிபதியைச் சந்தித்து முறையிட பெற்றோர்கள், உறவினர்கள் முடிவு

யாழ்ப்பாணம், மே 24

கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவைச் சந்தித்து தங்களது பிள்ளைகளின் நிலை குறித்து அவரிடம் நேரில் முறையிட முடிவு செய்துள்ளனர்.

இதற்கான அனுமதியை இவர்கள் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகிக் காணாமற் போன தமது பிள்ளைகள், உடன்பிறப்புக்கள் இருக்கும் இடத்தைத் தெரியப்படுத்துமாறு கோரவும்—

அவர்களை நீதி விசாரணை முன்நிறுத்துமாறு கோரவும்—

ஜனாதிபதியைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த 15 பேர் கொண்ட தூதுக்குழு ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் என்று அந்த அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்புக்குச் செல்லும் தூதுக்குழுவினர் தேசியமனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரும், சர்வோதயத் தலைவருமான ஏ.ரி. ஆரியரத்தினா உட்பட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்து முறையிடுவர். (ஐ-5-111)

## அடுத்தகட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

தற்போது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றன. அதே சமயம் அடுத்த கட்ட நகர்வுக்கான ஆயத்தத்தில் அவை முழு மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் வவுனியா செய்திகள் தெரிவித்தன

இதற்கிடையில் —

படையினர் கைப்பற்றிய ஓமந்தைப் பகுதியில் பொலீஸ் நிலையம் ஒன்றைத் திறப்பது குறித்தும் பாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன. இது தொடர்பாக உயர்மட்டக் குழு ஒன்று நேற்று முன்தினம் ஓமந்தைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டது.

ஓமந்தை மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள படையினரையும் அதிகாரிகள் குழு சந்தித்து உரையாடியது.

இதற்கிடையில் —

திருகோணமலையிலிருந்து நேற்று முழுநாளும் ஹெலிகள் அடிக்கடி வவுனியா சென்று திரும்பிய வண்ணம் இருந்ததாக எமது திருகோணமலைச் செய்தியாளர் அறிவிக்கின்றார்.

அனேகமாக அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக ஆயுதங்கள் மற்றும் துருப்புக்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது. (உ-3-21-150-164)

## செங்கலடிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

ராஜா (வயது 35) என்பவர் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் சுடப்பட்டார். அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கேட்டு ரெலோ அலுவலகத்திலிருந்தோர், இராணுவத்தினர் சகிதம் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி ஓடி வந்ததாகவும் —

அவர்களை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் —

மேலும் கூறப்படுகின்றது.

இதையடுத்து செங்கலடிச் சந்தை யுத்தகளமானது.

இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து வேட்டுக்களை முழங்கியதாகக் கூறப்படுகின்றது. அயலில் இருந்த படை முகாம்களில் இருந்து பரவலாகச் ஷெல்களும் ஏவப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்த வேட்டுக்கள் மற்றும் ஷெல்களின் இடையில் சிக்கியே பொதுமக்கள் நால்வர் உயிரிழந்தனர்; 13 பேர் காயமடைந்தனர்.

## யுனிசெவ்...

(ஏழாம் பக்கத் தொடர்)

கொட்டைக் காடு, ஊரத்தி ஆகிய இடங்களில் 100 மலசல கூடங்கள் அமையும்.

★ சாவகச்சேரியில் தவசிக் குளத்தில் 100 மலசல கூடங்கள் அமையும்.

★ பருத்தித்துறையில் வாளி மலசலகூட முறையை ஒழிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 15 அடுக்கு நிரையில் மலசலகூடங்கள் அமைக்கப் படவிருக்கின்றன. 3 கட்டத் தொகுதியாக இவை அமைக்கப்படும். அத்துடன் அங்கு 10 வாளிமலசல கூடங்கள் [illegible] மலசல கூடங்களாக மாற்றப்படவுள்ளன. (ஐ-3)

## ஜி. சீ. ஈ ...

(முதலாம் பக்கத் தொடர்)

தும் பணி முடிய முடிய. அந்தந்த இடங்களுக்கு பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பரீட்சைத் திணைக்களத்தில் ஒரு கம்பியூட்டர் மட்டுமே செயற்படுவதால் 'Print Out' எடுக்கும் பணியும் மிகமந்தமாகவே நடப்பதாகக் கூறப்படுகின்றது.

வவுனியா பகுதிகளுக்கான பரீட்சை முடிவுகள் இன்று அல்லது நாளை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது வவுனியாச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

இந்த வரிசையில் யாழ்ப்பாணத்துக்கான முடிவுகள் புதனன்றே யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் சுட்டிலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பரீட்சை முடிவுகளை அறியக் கூடியதாக இருப்பதாகவும்—

இன்று மாலை அல்லது இரவுக்கு முன்பதாக யாழ். மாவட்டத்தின் முக்கிய பாடசாலைகளின் சிறப்புப் பெறுபேறுகளை தம்மால் பெற்றுத் தரக் கூடியதாக இருக்கும் எனவும்—

எமது கொழும்புச் செய்தியாளர் நேற்றிரவு குறிப்பிட்டார்.

தகவல் தொடர்பு வசதிகள் பூரணமாகக் கிட்டினால் பாடசாலைகளின் முக்கிய முடிவுகள் நாளைய உதயனில் பிரசுரமாகும்.

கொழும்பில் கிடைத்த ஒரு தகவலின்படி —

கொழும்பு டி. எஸ். சேனநாயக்கா மகா வித்தியாலயத்தில் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய 42 பேருக்கு எட்டுப்பாடங்களிலும் 'டி' சித்தி கிடைத்திருக்கின்றது. (உ)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்)

லில் ஏழு வயதுச் சிறுமி உட்பட இருவர் கொல்லப்பட்டனர்; மற்றும் நான்கு படையினரும் மூன்று பொதுமக்களும் காயமடைந்தனர். படையினரின் டிராக்டர் ஒன்று, டிரக் ஒன்று, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் விடுதி ஆகியவையும் மற்றும் பல வீடுகளும் கட்டடங்களும் சேதமுற்றன.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாகக் கருதப்படுகின்றது.

அன்றிரவு 8-30 மணி முதல் அதிகாலை 5-30 மணி வரை 9 மணி நேரம் இத்தாக்குதல் நீடித்ததாகவும் தெரியவருகின்றது.

ஜனகபுர, அகாத்துகாய் வெவ, திகவெவ, கஜபாபுர, நெளும்வெவ, தலையாளபுர ஆகிய கிராமங்கள்மீதே இந்த ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களினால் அந்தக் கிராமங்கள் இரவு முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (உ-164)

## 1,400 பேர் வவுனியாவில்

வவுனியாவின் வடக்கேயிருந்து வவுனியாவுக்கு வந்த பின்னர் —இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால் — திரும்பிச் செல்ல முடியாமல் வவுனியாவில் ஆயிரத்து 465 பேர் சிக்குண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அவர்களில் அறுநூறு பேருக்கு தினசரி இரண்டு நேர உணவை 'புளொட்' அமைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-164)

## பொதுக் கூட்டம்

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தின் 68 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜூன்மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-4)

## மாஹோவில் மோ. சைக்கிள்

வடமராட்சி, மே 24

தனியார் வர்த்தகருக்கான குத்தரிசி மற்றும் சைக்கிள்கள் மோட்டார்சைக்கிள்கள் போன்றவற்றுடன் 'மாஹோ' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இதே வேளை பொருள்களை இறக்கி முடித்த கொரிய நாட்டுக் கப்பலான ''பொஹான்ஸாங்'' என்ற கப்பல் பருத்தித்துறையிலிருந்து கொழும்பு திரும்பியது. (ஐ-173)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகம் தற்காலிகமாக பதவியா பிரதேச செயலாளர் பிரிவு நிர்வாகத்துடன் இணைக்கப்படுகிறது என்று அநுராதபுரம் அரச அதிபர் ஜெயம்பதி ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மூலம் தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கு — குறிப்பாக கரையோரப் பிரதேசம் — துண்டாடப்பட்டு முழுச் சிங்கள மாவட்டமான அநுராதபுரத்துடன் இணைக்கப்படுவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (உ-4)

## கற்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று சுமார் 500 பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுற்றிவளைத்து அமைப்பாளர்களைக் கைது செய்து மாலை 3.00 மணிக்கு விடுவித்தனர் எனவும் —

மொஹமட் இலியாஸ் மேலும் தெரிவித்தார். (உ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org